## கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் - 2016

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் மற்றும் துணை தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப, நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைய ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்(திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக, நிதி நிலைமைக்கூற்று, இலாபங்கள் மற்றும் ஏனைய விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று, காசுப்பாய்ச்சல்கூற்று என்பவற்றைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதேனும் செம்மையாக்கல் அவசியமாகக் காணப்பட்டதா என்பதை நான் தீர்மானிக்க முடியாதுள்ளேன்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம் - தொகுதி

இவ்வறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதியதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற முடியாதுள்ளேன். அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை நான் தெரிவிக்கவில்லை.

**மறுப்பு அபிப்பிராயம் - கூட்டுத்தாபனம்**

இவ்வறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதியதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற முடியாதுள்ளேன். அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை நான் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

### 2.2.1 கணக்காய்விற்கான சான்றின்மை

தொகுதியினது ஏனைய கம்பனிகளுக்குரியதாக மீளாய்வாண்டின் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 175,229,224 வருமானமும் செலவினமாகிய ரூபா 165,457,431 மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 125,058,856, பெறுமதியுடைய நடைமுறை அல்லாத சொத்துக்கள், ரூபா 75,274,981 பெறுமதியான நடைமுறைச் சொத்துக்கள், ரூபா 61,691,416 பெறுமதியான உரித்துகள், ரூபா 968,346 பெறுமதியுடைய நடைமுறை அல்லாத பொறுப்புகள், ரூபா 137,674,056 பெறுமதியான நடைமுறைப் பொறுப்புகள் என்பவற்றை உறுதி செய்வதற்கு இயலுமான தகவல்களும் பட்டோலைகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - கூட்டுத்தாபனம்

### 2.3.1 கூட்டுத்தாபனம் தொடர்ந்து நிகழ்விலிருத்தல்

2000 தொடக்கம் 2013 வரை தாபனம் தொடர்ச்சியாக நட்டத்திற்குள்ளானதால் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 7,710,099,424 எதிர்மறையான பெறுமதியைக் காட்டியவாறு நிகர சொத்துக்கள் நலிவடைந்திருந்தன. 2014 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சொத்துக்களது மீள் மதிப்பீடு காரணமாக உருவாகிய மிகை ரூபா 5,780,204,145 ஆகும். இதன் காரணமாக, நிகர சொத்துக்களது எதிர்மறைப் பெறுமதியானது 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,764,039,908 வரை குறைவடைந்திருந்தன. திறைசேரியால் வழங்கப்பட்ட 4,397,000,000 பெறுமதியான திறைசேரி பிணைமுறிகள், 2016 நவம்பர் 02 ஆம் திகதியின் அமைச்சரவைக் குழு தீர்மானத்திற்கு அமைய அவை மீளாய்வாண்டில் பொதுத் திறைசேரியால் தீர்க்கப்பட்டு ரூபா. 1,388,648,519 பெறுமதியான நிகர சொத்துக்களாக மாற்றப்பட்டுள்ளன.

### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபனம் அரச வங்கி ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட குறுகிய கால கடனுக்கான வட்டி 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா. 16,427,948 காணப்பட்ட போதிலும் ஒவ்வொரு ஆண்டிற்குமான வட்டி தனித்தனியாக இனங்காணப்பட்ட போதிலும் அந்த வட்டி செலவினமானது முழுமையாக செலவினக்கணக்கிலும் வருமான கூற்றிலும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விற்பனைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கென 2006 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட கடன் ரூபா 275,000,000 ஆகும். இதனைத் திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படாததுடன், திருப்பிச் செலுத்த வேண்டிய கடனாக அதனைக் காட்டுவதற்குப் பதிலாக பிரதிவியூகப்படுத்தும் ஒதுக்கத்தில் அது உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) 2012 முதல் 2016 வரை கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தொகையானது கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் நிதிக்கூற்றிலுள்ள ரூபா. 8,684,772 பெறுமதி இனங்காணப்படாத வைப்பாக உள்ளடக்கப்பட்டதால் கையில் உள்ள காசு மீதியானது செலவு மீதியை காட்டியிருந்தது. இதனால் மீளாய்வாண்டில் செலவு மீதியானது அதிகரித்துக் காணப்பட்டதன் காரணமாக கையிலுள்ள காசு மீதியானது குறைவான காட்டப்பட்டிருந்தது.

(உ) தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்கள் கொள்வனவு செய்தல் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் முறையாக பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை. இதனால் கடன் கொடுத்தோருக்கு கொடுக்கப்பட வேண்டிய ரூபா.12,628,486 பெறுமதியும் மற்றும் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா. 5,760,978 பெறுமதியும் பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

----------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான தாபன நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ரூபா 274,121,687 கொடுக்கப்பட வேண்டிய தொகையாகவும் மற்றும் ரூபா 78,231,544 சபையிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகையாகவும் உள்ளது. நெல் சந்தைப்படுத்தல் சபையின் நிதிக்கூற்றின் படி கூடடுத்தாபனத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய தொகை ரூபா 462,689,308 இருந்து ரூபா 1,202,897 ஆகவும் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட வேண்டிய தொகை ரூபா 188,567,621 இருந்து ரூபா 77,028,647 ஆக வேறுபாட்டு காணப்பட்டிருந்தது.

### 2.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியவில்லை.

(i) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 483,339,255 கூட்டுத் தொகையுடைய 13 நடைமுறைச் சொத்துக் கணக்கு மீதிகள் ரூபா 251,776,979 கூட்டுத் தொகையுடைய 2 நடைமுறை பொறுப்புக்கள் கணக்கு மீதிகள், ரூபா 2,696,357,212 கூட்டுத் தொகையுடைய 6 வருமானக் கணக்கு மீதிகள், ரூபா 2,456,454,089 கூட்டுத் தொகையுடைய 2 செலவினக் கணக்கு மீதிகள் என்பன சம்பந்தமாக காலப்பகுப்பாய்வு, மீதிகளது உறுதிப்படுத்தல், விரிவான பட்டோலை, கையிருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் என்பன இல்லாதிருத்தல்.

(ii) மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் கொடுப்பனவு செய்ய வேண்டியனவாக காட்டப்பட்ட 17 கணக்கு மீதிகளது ரூபா 178,541,559 கூட்டுத் தொகையை நிச்சயமாக இனங்காண்பதற்குரிய தகவல்கள் மற்றும் வயது பகுப்பாய்வுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) ரூபா 252,042 பெறுமதியான அலுவலக உபகரண கணக்கின் மீதியினை உறுதிப்படுத்துவதற்கான கொடுப்பனவு சீட்டை, பட்டியல் மற்றும் பொருள் பெறுகை குறிப்பேடு காணப்படவில்லை.

(iv) ரூபா 1,892,760 பெறுமதியாக நிலையான சொத்துக்கள் தொடர்பான பேரேட்டுக் கணக்கில் பதியப்பட்ட பொது நாட்குறிப்பேடுகளை உறுதிப்படுத்துவதற்கு கொடுப்பனவு சீட்டுக்கள் மற்றும் தொடர்புடைய தகவல்கள் இல்லாதிருத்தல்.

(v) தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களினை வழங்கும் வழங்குனர்களின் பெறுமதி ரூபா 5,749,080 எதிர்மறையான மீதியினை காட்டியது. தேவையான சான்றுறுதிப்படுத்தல் ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவு தொடர்பான கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களை கொண்டு அதனை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(vi) கூட்டுத்தாபனம் அல்லாத கட்டடத்திணைக்களத்தின் பொதுப் பங்கு நிதியானது ரூபா 4,143,032 நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் 48 கடன்பட்டோர் கணக்கு மீதி ரூபா 12,679,243 தொகைகளுக்கு சான்றுறுதிப்படுத்தல் கடிதம் கோரப்பட்ட போதிலும் 03 கடன்பட்டோர் கணக்கு மீதியான ரூபா 8,358,827 மாத்திரமே சான்றுறுதிப்படுத்தல் கடிதம் பெறப்பட்டிருந்தன.

## 2.4 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டியனவற்றின் பெறுமதி ரூபா 758,355,094 ஆகும். அதில் ரூபா 426,732,845 அல்லது 56 சதவீதமானது அறவிடப்படுவதற்குப் போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது நட்டக்கடனுக்கான நிதியேற்பாடு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வெளி நிறுவனங்களுடன் 04 கட்டிடக் குத்தகை தொடர்பாக எந்தவித ஒப்பந்தங்களும் இருதரப்பினர்களும் இடையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா. 5,367,960 பெறுமதியான வாடகை வருமானங்கள் 2018 மார்ச் 31 வரையில் விதிக்கப் பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டில் லங்கா சதொச கம்பனிக்கு 50 தடவைகள் ரூபா 136,772,376 பட்டியல் பெறுமதியில் போக்குவரத்து வசதியினை வழங்கியிருந்தது. 2018 ஜனவரி 30 ஆம் திகதி வரை ரூபா 127,939,218 பெறுமதியான தொகை பெறப்பட்டிருந்தன. அதற்கிணங்க 2016 ஆம் ஆண்டில் இருந்து ரூபா 8,833,158 பெறுமதியானது பெறப்பட வேண்டிய தொகையாக காணப்படுகின்றன.

(ஈ) 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,000,000 ஆன கடன் தொகையை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு குறுங்காலக் கடனாக வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான வட்டி வருமானத்தினை 2018 செப்டம்பர் 14 ஆம் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டில் இருந்து தாபனத்திற்கு சொந்தமான கட்டிடம் எந்தவிதமான எழுத்திலான ஒப்பந்தங்களின்றியும் முற்பண வைப்புக்களின்றியும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டில் பெறப்படாததினால் ரூபா 10,984,800 ஆனது நட்டமாக காட்டப்பட்டிருந்தன.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானத்துடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1991 இன் 31 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 2.2 (அ) ஆம் பிரிவு | தாபனத்தின் நிதி முதலீடு செய்யப்படுகையில் தற்போதுள்ள பொதுக் கம்பனிகளில் மாத்திரமே செய்யப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணான வகையில் ரூபா 10 பெறுமதியான பெயரளவு முதலீடு மேற்கொள்ளப்பட்டு ''வரையறுக்கப்பட்ட சதொச பொருளாதார நிலைய சேவைகள் தனியார் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட நிர்மாண மற்றும் பொறியியல் தனியார் கம்பனி'' எனும் பெயர்களில் 02 அரச கம்பனிகளைத் தாபித்து தாபனத்தின் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களைப் பணியில் அமர்த்தியிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.17.1 உபபிரிவு | பிரதான கடனாளியின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிகின்ற எவரேனுமோர் உத்தியோகத்தர் அக்குறிப்பிட்ட கடனாளியின் பிணையாளராக அங்கீகரிக்கப்படமாட்டார். ஆனால் இவ்விதி முறைகளுக்கு முரணாக உத்தியோகத்தருக்கு ரூபா. 50,000 கடனை வழங்க இரண்டு உத்தியோகத்தர்களை பிணையாளியாக ஏற்று தாபனமானது அதனை ஒப்புக்கொண்டு கடனளித்துள்ளது. |
| (இ) 1988 இன் 79 ஆம் இலக்க திருத்த சட்டத்தின் படி 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப்புக்கள் சட்டத்தின் படி | அரச தாபனத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் சொத்துகளையும் மற்றும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் பத்திரத்தை ஆண்டு தோறும் சமர்ப்பிக்க வேண்டும். 07 தனிநபர் கோவைகளை மாதிரிக்கணக்காய்வில் பரிசோதிக்கப்பட போது அக்கோவையிலுள் சொத்துகளையும் மற்றும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் பத்திரங்கள் காணப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

முறையான அங்கீகாரமின்றி கடன் அடிப்படையில் முன்னைய இரு ஆண்டுகளிலும் கூட்டுத்தாபனம் ரூபா 8,660,782 பெறுமதியான தகரத்தில் அடைக்கப்பட்ட மீனை விற்பனை செய்திருந்தது. அதில் ரூபா 2,732,120 இனை அறவிடுவதற்கு 2018 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் தாபனத்தால் இயலாதிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தாபனத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 504,948,375 பற்றாக்குறை ஆகியதுடன் அதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 541,087,014 ஆகவுமிருந்தது. இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது பற்றாக்குறை ரூபா 36,138,639 குறைவடைந்துள்ளது. தாபனத்தின் ஏனைய செயற்பாட்டு வருவாய் ரூபா. 31,088,977 இனால் அதிகரித்தமையே பற்றாக்குறை குறைவதற்கான பிரதான காரணியாகின்றது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 674,802,751 ஆகிய பற்றாக்குறை 2016 ஆம் ஆண்டில் தளம்பலுடன் ரூபா 504,948,375 ஆகியிருந்தது. ஊழியர்களுக்கான பணிக்கொடை, ஊழியர்களது ஊதியம், வரி மற்றும் தேய்மானத்தைக் கருத்திற் கொள்ளுமிடத்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 482,495,559 எதிர்மறைப் பெறுமதியுடனிருந்த பங்களிப்பு குறைவடைந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 120,424,702 எதிர்மறைப் பெறுமதியை அடைந்திருந்தது.

### 3.2 தாபனத்திற்கு எதிராக அல்லது தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட சட்டரீதியான நிகழ்வுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் தாபனத்திற்கு எதிராக ரூபா 89,385,920 இழப்பீடு கோரி 55 வழங்குகளைத் தொடுத்திருந்தனர். மீளாய்வாண்டின் போது தாபனம் ரூபா 6,524,020 இழப்பீட்டை வழங்கியிருந்தது.

(ஆ) தாபனம் 08 நிறுவனங்களுக்கும் 04 நபர்களுக்கும் எதிராக ரூபா 106,388,058 கோரி 14 வழக்குகளைத் தொடுத்திருந்தது. மீளாய்வாண்டில் அதன் மூலம் அறவிடப்பட்ட தொகை ரூபா 24,474,886 ஆகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயலாற்றல் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தாபனத்தின் மீளாய்வாண்டில் நோக்கங்களிலும் குறிக்கோள்களிலும் ‘‘புதிய உற்பத்திப் பொருள் தோற்றுவாய்க்கான ஆராய்ச்சிகளையும் அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்ளுதல்’’ தொடர்பாக குறிப்பிடப்பட்ட செயலாற்றுகை அறிக்கையில் கவனஞ்செலுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பான செயலாற்றல் திட்டத்தில் விபரிக்கப்பட்ட நடடிக்கைகளின் செயலாற்றல் பற்றி பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் 15 அத்தியாவசிய உணவு வகைகளை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தன. எனினும் 2016 ஆம் ஆண்டில் 02 அத்தியாவசிய உணவு வகைகளை மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டில் 04 புதிய உணவு வகைகளை இறக்குமதி செய்து இவ்உணவுகளுக்கு வரியினை விலக்களித்து விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டபோது மீளாய்வாண்டில் ஒரு உணவு வகைக்கு மாத்திரமே வரிவிலக்களிக்கப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டில் 04 கடைகளை மீள்புனரமைக்க தீர்மானிக்கப்பட்ட போதிலும் இரு கடைகள் மாத்திரமே புனரமைக்கப்பட்டிருந்தன.

(iii) ஹிங்குரான்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி ஆலைகளின் நெல் உற்பத்தியின் இயலளவினை 24,300 மெட்ரிக்தொன் ஆக அதிகரிப்பதற்கு மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நெல் அறுவடையானது மீளாய்வாண்டில் அதிகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2000 மெட்ரிக்தொன் நெல் முழுமையாக கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டில் தீர்மானிக்கப்பட்டன. எனினும் மொத்த தொகையில் 1270 மெட்ரிக்தொன் நெற்களையே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iv) மீளாய்வாண்டில் தாபனத்திற்கு சொந்தமான இராஜகிரிய வளாகத்தினை பல்வகை நோக்கத்திற்கான வியாபார நிலையமாக உருவாக்கி வாடகை வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், டி.ஆர். விஜயவர்த்தனா மாவத்தை காணியினை மீளாய்வாண்டில் இரண்டு நோக்கத்திற்கான செயற்திட்ட நிலையமாக உருவாக்கி வாடகை வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டன. எனினும் இச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டில் தாபனத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தினை வாடகைக்கு வழங்கி ரூபா 1,050,000 பெறுமதியினை வருமானமாக பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 603,012 பெறுமதியினையே வருமானமாக ஈட்டக்கூடியதாக இருந்தது. இதில் ரூபா 257,189 பெறுமதியான தொகை 2017 ஏப்ரல் 25 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட வேண்டியவையாக காணப்படுகின்றன.

(vi) தாபனமானது மீளாய்வாண்டில் கட்டடத்தினை முழுமையாக புனரமைத்து மற்றும் திருத்துதல் வேலைகள் மேற்கொண்டு வாடகைக்கு வழங்கி வாடகை வருமானமாக ரூபா 214,000,000 பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் தாபனத்தின் கட்டடங்கள் முழுமையாக புனரமைக்கவோ அல்லது திருத்த வேலைகளோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vii) மீளாய்வாண்டில் சதொச கட்டிடத்தின் 4 ஆவது மாடியிலிருந்து வாடகையாக ரூபா 15,000,000 பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்ட போதிலும் ரூபா 6,200,000 பெறுமதியினையே வாடகையாக மீளாய்வாண்டில பெற்றுக்கொள்ளப்பட்டன.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தாபனம் ரூபா 54,722,228 பெறுமதியான சொத்துக்களை ‘‘வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனிக்கு’’ஒப்படைத்து அதன் பொருட்டுப் பணத்தைப்

பெறுவதற்கோ அல்லது கம்பனியின் பங்குகளைப் பெறுவதற்கோ முறையான இணக்கத்தை 2018 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் எய்தாதிருந்தது.

(ஆ) தாபனம் 1999 ஆம் ஆண்டில் தனியார் கம்பனி ஒன்றில் ரூபா 9,923,710 முதலீடு செய்திருந்தது. எனினும், அக்கம்பனி தொடர் நட்டத்திற்குள்ளாமையால் 1999 முதல் 2017 வரை பங்கிலாபம் எதுவுமே பெறப்படவில்லை.

(இ) சதொசவின் பொதியிடல் பிரிவானது 95சதவீதத்திற்கு அதிகமான வருமானத்தினை லங்கா சதொசவிடமிருந்து பெற்றுக்கொள்கின்றன. ஆனால் இச்சேவை வழங்குதல் மற்றும் பணப்பெறுகைகள் தொடர்பாக இரு நிறுவனங்களுக்குமிடையில் எந்தவிதமான ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், பொதியிடல் பிரிவில் வருவாயை ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் பெற்றுக்கொள்கின்றன எனினும் முகாமையானது மாற்றுவழிகளில் பெறுவதற்கு எந்தவிதமான கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தாபனத்திற்கு சொந்தமான விற்பனைக்கூடங்கள் மற்றும் களஞ்சியக் கட்டிடங்கள் இலங்கையின் மிகவும் முக்கியமான வர்த்தக பிரதேசத்தில் காணப்படுகின்றன. அவற்றினை தாபனமானது ஒழுங்கான முறையில் பராமரிக்க வேண்டியிருந்ததுடன் பயன்படுத்த இயலாமல் இருந்த சில விற்பனைக்கூடங்கள் மற்றும் களஞ்சியக் கட்டிடங்களை பகுதியாக பகிர்ந்து முறையாக பேணி அவற்றின் சந்தைப் பெறுமதியில் வாடகைக்கு வழங்கக்கூடியதாக இருந்தன. மேலும் 08 விற்பனைக்கூடங்கள் மற்றும் களஞ்சியக் கட்டிடங்களை மாதிரியாக மதிப்பீடும் பொழுது ரூபா 245,037,108 பெறுமதியான வருமானமானது இழக்கப்படுவது அவதானிக்கப்பட்டன.

(உ) தாபனமானது மாதாந்த வாடகையாக ரூபா 15,885,376 பெறுமதியினை 36 ஆதனங்களிலிருந்து பெற்றுக்கொள்கின்ற போதிலும் அவற்றுக்கான குத்தகை வாடகை ஒப்பந்தமானது முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தாபனமானது ரூபா 105,187,500 பெறுமதியான 99 வாகனங்கள் ‘‘கமட சவிய சதொச படிய’’ செயற்திட்டத்திற்காக நிதிக்குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இச்செயற்திட்டமானது முடிவுறுத்தப்பட்டதனால் இவ்வாகனங்கள் மீளாய்வாண்டில் குத்தகைக்கம்பனியிடம் மீளவழங்கப்ட்டிருந்தன. இதனால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் தொடர்பாக நிதி விளைவினை குத்தகைக் கம்பனியிடமிருந்தோ அல்லது சுயமதிப்பீட்டின் மூலமோ தாபனமானது நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்கள் கொள்வனவு செய்தல் தொடர்பான ரூபா 5,169,972 பெறுமதியான கொடுக்குமதி மீதிகள் வழங்குனர்களுக்கு கொடுத்து தீர்க்கப்பட்ட போது ஒரே இலக்கமான கொள்வனவுக்கட்டளை இரு வழங்குனர்களின் கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2014 முதல் 2019 வரை ஐந்தாண்டுச் செயற்திட்ட அமைப்பாக 100 லொறிகளைப் பயன்படுத்தி 2014 திசெம்பர் 04 ஆந் திகதி ஆரம்பித்திருந்த ‘‘கமட சவிய சதொச படிய’’எனும் செயற்திட்டம் 2015 சனவரியின் பின்னர் செயலற்றுப் போனதுடன், 2016 மார்ச் 03 ஆந் திகதியளவில் தாபனம் அச்செயற்திட்டத்தால் ரூபா 65,859,217 நட்டத்திற்குள்ளாகியிருந்தது. செயற்திட்டம் செயலிழந்த போதும், 2018 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் செயற்திட்ட உதவியாளர்கள் வசமிருந்த லொறிகளையும் திருப்பிப் பெறுவதறக்ான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி முகாமைத்துவத் தரத்தில் 22 பேர், முகாமைத்துவ உதவி மட்டப் பதவிகளில் 51 பேர், ஆரம்பத்தரப் பதவிகளில் 247 பேர் என 320 மொத்த எண்ணிக்கையைக் கொண்டிருந்தது. 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு 242 மேலதிகமும் 31 வெற்றிடங்களும் நிலவின.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு 2013 ஆம் ஆண்டில் 3 சம்பள ஏற்றமும் 2014 ஆம் ஆண்டில் 2 சம்பள ஏற்றங்களும் வழங்கப்பட்டதால் ரூபா 159,390 கூடுதலாகக் சம்பளக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாக 2012 முதல் 2016 மார்ச் 01 ஆந் திகதியளவில் வழங்கப்பட்ட தொகை ரூபா 589,490 ஆகும்.

(இ) தாபனத்தை ஸ்தாபிக்கும் அதிகாரச் சட்ட ஏற்பாடோ அல்லது வேறெந்த ஏற்பாடுமே இல்லாததும் தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியில் உள்ளடங்காததுமான தொழிற்படு பணிப்பாளர் பதவிக்கு 2011 ஆம் ஆண்டில் ஆட்சேர்க்கப்பட்டு 2011 முதல் 2016 மார்ச் 31 வரை சம்பளமும் படியுமாக ரூபா 5,781,732 வழங்கப்பட்டிருந்தது.

## 4.5 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட தாபன வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 94,300 பெறுமதியான நிலையான சொத்துக்கள் உரிய அமைச்சிற்கு தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்தன.

## 4.6 வாகனப்பயன்பாடு

2015 யூன் 10 ஆந் திகதிய 2/2015 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் தாபனத்தின் 06 மோட்டார் வாகனங்கள் பயன்படுத்த முடியாத நிலையிலும், உழவு இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரப் பெட்டிகள் திருத்தப்படாமலும் தாபனத்தின் போக்குவரத்து பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

இதே போல் கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சினால், தற்காலிக அடிப்படையில் தாபனத்திற்கு ஒதுக்கப்பட்ட 03 வாகனங்கள் உடைந்த நிலையில் நீண்ட காலமாக தாபனத்தின் போக்குவரத்து பிரிவில் நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த வாகனங்கள் திருத்துவதற்கோ அல்லது உபயோகிப்பதற்கோ அல்லது கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சிடம் மீண்டும் கையளிக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 சனவரி 08 ஆந் திகதியன்றே கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. வரைவு ஆண்டறிக்கை சமாப்பிக்கப்படவில்லை.

## 5.2 கூட்டிணைந்த திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தாபனத்தின் தொலை நோக்குப் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு 2013 முதல் 2016 வரையான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், காலத்துக்குக் காலம் அது மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்ட போதும், அதில் மனிதவள அபிவிருத்தித் திட்டம், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்படவில்லை.

## 5.4 வரவு, செலவுத் திட்டக்கட்டுப்பாடு

மதிப்பிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளவாறான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பிடுகையில் 105 முதல் 1,066 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 5.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் பின்வருமாறு

| கணக்காய்வு அறிக்கையுடனான தொடர்பு | பந்தி |
|---|---|
| (அ) 2011 - 4.2 ஆம் பந்தி | பெறுமதி ரூபா 5,097,445 ஆகவுள்ள 12 ''கொள்கலன்களது'' மின்சார மோட்டார் தொலைந்து போனமை. |
| (ஆ) 2011 - 4.8 ஆம் பந்தி | 2006 செப்டம்பரில் தாபனம் இறக்குமதி செய்த ரூபா 14,501,998 பெறுமதியான 140 அரிசித் தயாரிப்பு இயந்திரங்கள் 2018 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் தாபனத்தில் பயனற்றிருந்தன. |
| (இ) 2012 - 2.2.3(உ) | 2011 ஆம் ஆண்டின் பொருட்டு வருடாந்தக் குத்தகை வாடகையாகவும் வெளிநாட்டு குடி வகைகளுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணமாகவும் லங்கா சதொச கம்பனியிலிருந்து பெற வேண்டிய ரூபா 71,561,640 மீளாய்வாண்டு முடிவிலும் அறவிடப்படுவதறகோ அல்லது கணக்குகளில் சீராக்கல் செய்யப்படுவதறகோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தன. |
| (ஈ) 2012 - 4.3(ஆ) | வாடகை அடிப்படையில் பெறப்பட்ட உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குரிய 02 களஞ்சியங்களில் உணவு ஆணையாளரது அனுமதியின்றி ரூபா 78,978,504 செலவிடப்பட்டு தாபனத்தால் நெல் அரைக்கும் ஆலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (உ) 2012 - 2.2.3(ஈ) | வாகன விற்பனை இலாபம் ரூபா 5,101,356 ஆகும். எனினும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 5,892,489 ஆகக் காட்டப்பட்டதால் வாகன விற்பனை இலாபம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 791,133 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. |
| (ஊ) 2012 - 2.2.4(அ) | 2012 ஆம் ஆண்டிற்கான பரீட்சை மீதியைப் பரிசீலிக்கையில் 168 சொத்துக்கள் மற்றும் செலவினக் கணக்குகளது ரூபா 27,584,061,602 கூட்டுத் தொகையுடைய வரவு மீதிகளும் 110 வருமானக் கணக்குகளது ரூபா 30,129,471,178 கூட்டுத் தொகையுடைய செலவு மீதிகளும் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியிராமை. |
| (எ) 2012 - 2.2.5(அ) | 2012 திசெம்பர் 31 வரை பொதியிலடைத்தற் பிரிவில் பெறப்பட்ட மொத்த வெள்ளைச் சீனி சம்பந்தமாக 15,000 கிலோ கிராமுக்கு ரூபா 18,450 கட்டண வித்தியாசம் மற்றும் 23,514 பக்கெட்டுகள் அல்லது 170,119 கிலோ கிராம் பொதியிலடைத்தற் பொருட்கள் குறைவின் பொருட்டு வருமானம் இழப்பிற்குள்ளாகும் அபாயம் நிலவியமை தொடர்பாக முகாமைத்துவம் 2018 மார்ச் 31 ஆம் திகதி வரை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. |
| (ஏ) 2013-2.2.3(அ)iii | பரீட்சை மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களை ஒப்பிடப்படும் போது 03 கணக்கீட்டு மீதிகளில் ரூபா 299,798,933 வித்தியாசம் புலனாகியது. |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அதன் பிரகாரம் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கடடுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேட்டுக் கணக்கிற்கு சுட்டிலக்கம் பயன்படுத்தப்படாமை<br>(ii) நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கு குறிப்புக்கள் சரிவர எழுதப்படாமை<br>(iii) உறுதிச்சான்றுடன் தொடர்புடைய துணை ஆவணங்கள் முறைப்படி உறுதிச்சான்றுகளுடன் இணைக்கப்பட்டிருக்காமை |
| (ஆ) குத்தகை வாடகை வருமானத்தை அறவிடுதல் | (i) நிலுவையாகவுள்ள குத்தகை வாடகையை அறவிடுவதற்குப் போதிய நடவடிக்கை எடுக்காமை<br>(ii) குத்தகை வாடகை தொடர்பான ஒப்பந்தம் மேற்கொள்ளாமை மற்றும் குத்தகை வாடகை உடன்படிக்கையினை பின்பற்றவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) கொள்வனவுக் கட்டுப்பாடு | (i) | பொறுப்பதிகாரியினால் இருப்புப் பற்றுச்சீட்டில் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | பெறுகை வழிகாட்டியை பின்பற்றாமை. |
| (ஈ) பதிவேடுகளைப் பேணுதல் | | நிலையான சொத்துப் பதிவேடு முறையாக பேணப்படவில்லை. |
| (உ) தனிநபர் கோவை | (i) | நியமனக்கடிதத்தினை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான விடயங்களை ஏற்றுக்கொண்டு நியமன ஏற்புக் கடிதத்தினை உத்தியோகத்தர்கள் வழங்கியிருக்கவில்லை. |
| | (ii) | புதிய நியமனத்தின் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்களின் மருத்துப் பரிசோதனைகள் மற்றும் மருத்துவ அறிக்கைகள் தனிப்பட்ட கோவையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | அரசியலமைப்பு சட்டத்தின் அட்டவணை 07 இன் உபபிரிவில் காணப்படுகின்ற படிவத்தினை பதவிற்கு நியமிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் சத்தியப்பிரமாண பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | ஒழுக்கநெறிக்கோவை பேணப்படாமை |